57

# பெருஞ்சேரித் தலவரலாறு

657
2-55

★

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUN 1955
MADRAS

Q23:38·2||93·7
N54
113854

தேவஸ்தான வெளியீடு.

உ

சிவமயம்

# பெருஞ்சேரித் தலவரலாறு

எழுதியவர் :

**வித்துவான். திரு. M. ஆறுமுக தேசிகர்**

வெளியிட்டோர் :

**திரு. M. சபாபதி முதலியார் அவர்கள்,**

H. R. & C. E. ஆலய நிர்வாகி

ஸ்ரீ வாகீஸ்வரசுவாமி தேவஸ்தானம், பெருஞ்சேரி.

**தேவஸ்தான வெளியீடு.**

**விலை ]** 1954 **[ 2-அணா**

113854

மாயூரம், ஸ்ரீ ராகவன் பிரஸில், அச்சிடப்பட்டது.

காப்பிகள் 1000, 20—2—1954.

O23:38. 21193P
N54

உ

சிவமயம்

# முகவுரை

எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய பரம்பொருளைத் தென்னாட்டுக்கு உரிமையாக்கி வணக்கம் செலுத்துகின்றார் வாதவூரடிகள். சிவம்பெருக்கும் திருக்கோயில்கள், வானளாவிய கோபுரங்களோடு இன்றைக்கும் எங்குபார்த்தாலும் காணப்படும் தென்னாட்டுக்காட்சியே அதற்குக்காரணம். அத்தகைய திருக்கோயில்கள் விளங்கும் தலங்களின் பெருமையினை யாத்ரீகர்கள் அறிந்து வழிபடுவதற்குத் தலவரலாற்று நூல்கள் பெரிதும் பயன்படும். அந்த வகையில் இதனையும், சிவநலம்கெழுமிய பேரறிவாளர் திரு. M. சபாபதி முதலியார் அவர்கள் உலகிற்கு உபகரிக்கின்றார்கள்.

கந்தபுராணம், மாயூரப் புராணம், வழுவூர் க்ஷேத்திர மஹாத்மியம் முதலிய நூல்கள் இந்தவரலாறு எழுத மூலகாரணமாக இருந்தன. மூர்த்திகளைத் தோத்திரிப்பதற்குச் சில தோத்திரப்பாடல்களும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. அன்பர்கள்பெற்று, படித்து, வழிபாடாற்றி இறையருளால் எல்லா நலன்களும் எய்துவார்களாக.


இங்ஙனம்,

தருமபுரம்,
15—2—54.

**M. ஆறுமுகன்.**

# உள்ளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| தோற்றுவாய் | .... | 1 |
| தலமும் இடமும் | .... | 4 |
| தலத்தின் பெயர்கள் | .... | 5 |
| கோயில் அமைப்பு | .... | ,, |
| மூர்த்திகள் | .... | 7 |
| தீர்த்தங்கள் | ... | 8 |
| தலப்பெருமை | ... | 9 |
| புராண வரலாறுகள் | ... | 11 |
| சிற்பங்கள் | ... | 22 |
| திருப்பணிகள் | ... | 23 |
| பூஜையும், விழாக்களும் | ... | ,, |
| சுற்றுத்தலக் கோயில்கள் | ... | 24 |
| நிர்வாகம் | ... | ,, |
| வருமானமும், சொத்துக்களும் | ... | 25 |
| கல்வெட்டுக்கள் | ... | ,, |
| தோத்திரப் பாடல்கள் | ... | 26 |



ஆலயத்தின் முன் தோற்றமும் – ஞானதீர்த்தமும்.

உ

சிவமயம்

# பெருஞ்சேரித் தலவரலாறு

திருச்சிற்றம்பலம்

**கரும்பினும் இனியான்தன்னைக் காய்கதிர்ச் சோதியானை**
**இருங்கடல் அமுதந்தன்னை இறப்பொடு பிறப்பிலானைப்**
**பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவமுனிவர் ஏத்தும்**
**அரும்பொனை நினைந்த நெஞ்சம் அழகிதாம் நினைந்தவாறே.**

திருச்சிற்றம்பலம்.

## தோற்றுவாய்

**நா**ம் காணுகின்ற உலகம் மிகப்பெரியது. உலகத்தில் காணப்படுகின்ற பிறப்பு வேறுபாடுகளோ அளவற்றன. அவைகளை எண்ணப்புகுதல், நீருள் வீழ்ந்த ஒரு பொருளை விளக்குகொண்டு தேடும் முயற்சியை ஒக்கும். ஆனால் இறையருள் பெற்ற நமது சமயாசாரியப் பெருந்தகையார் 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனி பேதம் நிரைசேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் நின்றான்' என்று பிறப்பு வகைகளின் தொகை, பிறப்பித்தவர், பிறந்த உயிர்க்கும் பிறப்பித்த கடவுளுக்கும் உள்ள ஒற்றுமைத் தொடர்பு எல்லாவற்றையும் தெளிவாக்கி

யுள்ளார்கள். இப்படிப் பிறந்த உயிர்கள், மீட்டும் மீட்டும் அந்தப்பிறவி எனும் பொல்லாப் பெருங்கடலில் மூழ்கித் துன்பத்தை அடைகின்றன. இது கண்ட பெருமான் உயிர்கள்மீது வைத்த கருணையால் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று வடிவங்களாக விளங்கி அருள்புரிகின்றான்.

'ஈண்டுநாற் பிறப்பின் எழுவகைத் தோற்றத்(து)
எண்பத்து நான்கெனும் இலக்கம்
மாண்டபல் பவத்தில் பன்முறை வினையான்
மறிதரும் உயிர்களை எடுப்ப
ஆண்டருள் அமலன் அனுதியில் உலகம்
ஆக்குழி அருந்**தலம் தீர்த்தம்**
காண்டகு **மூர்த்தி** என்னமூன் றுருவாய்க்
கண்ணகல் உலகெலாம் கதித்து'

என்ற தணிகைப் புராணப் பாடல் இக்கருத்தை வலியுறுத்தும். ஆகவே இந்த மூன்றினையும் இறை வடிவங்களாகக் கருதவேண்டும். அதுமட்டும் போதாது. 'சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்; செப்ப நா அமைத்தேன்; வந்தனை செய்யத் தலை அமைத்தேன்; கை தொழ அமைத்தேன்' என்ற சேர அரசர் சொல்லியது போல, திரிகரணங்களாலும் வழிபாடு செய்யவேண்டும். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்கினல் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும். சற்குருவால் உண்மை ஞானம் கிடைக்கும். அதனல் பேரின்பம் பெறலாம்.

இத்தகைய தலங்கள் நம் நாட்டில் - அதுவும் சோழ நாட்டில் பல உள்ளன. பெருமான் ஆங்காங்கும் சிவ லிங்காதி திருமேனிகொண்டு எழுந்தருளி, தொடுத்த மல ரொடு தூபமும் சாந்தும்கொண்டு மெய்யன்போடு வழிபடு

வார்கட்கு, நித்தியானந்தப் பெரும்பேற்றை அளிக்கின்றுன். ஒவ்வோர் காலங்களில் அநுபூதிமான்கள், சிவக்காட்சியை நேரே காணப்பெற்றபோது தாமும் தரிசித்தார்கள்; 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதுதானே திருமந்திரம். அதன்படி அவர்கள் ஆங்காங்கும் இலிங்கப் பிரதிஷ்டை செய்து 'பெருமானே! தேவரீர் என்றும் இதில் எழுந்தருளியிருந்து வேண்டுவார் வேண்டியதை அளித்து அருள் வழங்கி வரவேண்டும்' என்று வேண்டிய விண்ணப் பந்தான் இன்றைக்கும் நம்மை உய்வித்து வருகின்றது. "திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனிதன்னைச் சிவனென வே கண்டவர்க்குச் சிவன் உறைவன்" என்பது ஞான சாத்திரம்.

சிவ தலங்களில் உமை, திருமால், பிரமன், இந்திரன், ஏனைய தேவர்கள், கலைமகள், இலக்குமி, முனிசிரேஷ்டர்கள் ஆகிய பலரும் சென்று வழிபட்டுப் பேறு பெற்றிருப்ப தோடுமட்டுமின்றி, நீர் வாழ்வன, ஊர்வன, பறப்பன ஆகிய அஃறிணைப் பொருள்களும் வழிபட்டு அருள்பெற் றுள்ளன.

'இயக்கர் கின்னரர் யமனெடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவர்எல்லாம்
அயர்ப்பொன்றின்றி நின் திருவடியதனை
அர்ச்சித்தார்'

என்பன போன்ற பல பாடல்கள் திருமுறைகளில் உள் ளன. மேலும் எறும்பியூர், குரங்காடுதுறை, குரங்கணில்

முட்டம், ஆவடுதுறை என்பன போன்ற பல தலப்பெயர்களும் சான்று பகர்கின்றன.

ஆகவே பிறப்புக்களுள் பெரும் பிறப்பாகிய மானுடப் பிறவி பெற்றோர் தலயாத்திரை சென்று, வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனுய பெருமானை வழிபடுவது, மிக மிக இன்றியமையாதது அல்லவா?

'மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன்றனை அர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ'

என்று மனம் நொந்து இரங்குகின்றார் ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரியார்.

## 2. தலமும் இடமும்

தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூகாவில் மாயூர நகரத்திற்குத் தென்மேற்கே ஐந்து கல் தொலைவில் விளங்குகிறது இத்தலம். மாயூரமிருந்து திருவாரூர் செல்லும் ரயில்வே லயனிலுள்ள மங்கநல்லூர் ஸ்டேஷனில் இறங்கி வடகிழக்கு நோக்கி முக்கால் மைல் வந்தால் தலத்தை அடையலாம். அல்லது ஷி லயன் பஸ் ரோட்டில் உள்ள சுந்தரப்பன் சாவடியில் இறங்கி, கிளியனூர் செல்லும் மட்பாதை வழியாக ஆறு பர்லாங்கு சென்றும் தலத்தை அடையலாம்.

மானேஜ்மெண்டு ஆரம்பப் பாடசாலை ஒன்றும் இங்கு இருக்கின்றது. பஞ்சாயத்து போர்டும் உண்டு. சுமார் இரண்டாயிரம் மக்கள் வாசம் செய்கின்றார்கள்.

## 3. தலத்தின் பெயர்கள்

இந்தத்தலம் **பெருஞ்சேரி** என இப்பொழுது வழங்கப் பெறுகிறது. **பிருஹத்சிரேணி** என்று, வடமொழிப் புராண மாகிய வழுவூர் மஹாத்மியத்தில் குறிக்கப் பெறுகிறது. பிருஹத் - பெரிய, சிரேணி - கூட்டம். கூட்டம் அதிகமாக இருக்கின்ற இடத்தை அக்காலத்தில் சேரி என்று வழங்கு வர். பார்ப்பனச்சேரி ஆயர்சேரி என்பனவும் காண்க. நாற்பத் தெண்ணுயிரம் முனிவர்கள் இங்கு வசித்ததால் இது பெரிய சேரி - பெருஞ்சேரி எனப்பெற்றது போலும்.

தேவதாரு மரங்கள் அடர்ந்திருந்ததால் தேவதாரு வனம், தாருவனம் எனப் புராணங்களில் வழங்கப் பெறு கிறது. [1]'தவாப் புகழ் மாயூரத்தின், வயங்கு தென் மேல் பால் தாருவனம் எனும் வனம் ஒன்றுண்டால்,' [2]'மாயன் காமரு மடந்தையாகி, மன்றல் செய் மலர்சூழ் தாரு வனத் திடைச் சென்ருனக' என்பன மாயூர ஸ்தலபுராணப் பாடற் பகுதிகள். கந்த புராண ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் 'தாருகாவனத் தெம்பிரான் பலிக்குறு தகவும்,' 'முன்பு தாருக வனத்தின் முனிவரர் யாரும்' என்று பல பாடல்களில் தாருகவனம் என்றே குறிப்பிடுகிருர்கள்.

## 4 கோயில் அமைப்பு

வீரசோழனுற்றின் வடபால் சோலைகளின் இடையே ஆலயம் அமைந்துள்ளது. பெருமான் கிழக்கு முகமாக


---

[1] யானை யுரித்த படலம் பா. 1. [2] ஷை பா. 6. ததீசி யுத்தரப் படலம் பா. 29, 30.

வீற்றிருக்கின்ருர். இவர் கருப்பக்கிருக விமானம் வட்டமாக இருப்பது ஒரு தனிச் சிறப்பு. இந்திர விமானம் என்பார்கள். அம்மையார் சந்நிதி தெற்கு நோக்கியது. திருமாளிகைப்பத்தியோடு கூடிய உட்பிராகாரம், வெளிப்பிராகாரம் ஆகிய இரு பிராகாரங்களுடன் கோயில் விளங்குகிறது. வெளிப்பிராகாரத் திருமதிலைச் சுற்றி மடவளாகம் - அதற்கு வெளியே திருவீதிகள். தென் திருவீதிக்குத் தென்பால் பெரிய தெரு ஒன்று உண்டு. அது எருஞ்சேரி என வழங்கப் பெறுகிறது. இது தான் முனிவர்கள் யாகஞ் செய்த இடம் என்று சொல்லப்படுகிறது.

முனிவர்கள் தவம்புரிந்த இடம் சின்ன தாருகாவனம் என்ற பெயரால் இலுப்பை மரங்கள் அடர்ந்த காடாக இப்பொழுது விளங்குகிறது. இது கோயிலுக்குப் பின்புறம் உள்ளது. கங்காளநாதர் (பிக்ஷாண்டவர்) கோயில் ஒன்றும் இவ் வனத்தில் உள்ளது. ஆலயத்திற்குத் தென்பால் நந்தவனமும் இருக்கிறது.

கோயில் முன் திருவாயிலில் புகுந்தவுடன் நந்தி பலிபீடம் துவஜஸ்தம்பம் ஆகியவைகளைக் கண்டு தரிசிக்கலாம். வலமாகத் திரும்பினல் தேவி பக்தனகிய தத்த சோழன் தனது தேவியுடன் கும்பிட்ட திருக்கோலமாகக் காட்சியளிக்கின்ருன். அருகில் மடைப்பள்ளியும் உண்டு. அப்பிராகாரத்திலேயே வடகிழக்கு மூலையில் யாகசாலை அமைந்துள்ளது. அம்மையார் சந்நிதிக்கெதிரில் உத்ஸவ மண்டபமும் விளங்குகிறது. உட் பிராகார வாயிலிலேயே வடபால் திருமாலைகட்டும் மண்டபம் உள்ளது. வாயிலில் நுழைந்து வலமாகத் திரும்பினல் ஸ்டோர்ரூம் காணப்படும்.



ஸ்ரீ சோமாஸ்கந்தர்

## 5. மூர்த்திகள்

இறைவர் திருநாமம் **வாகீஸ்வரர்.** மாயூர புராணம் வாக்கு வள்ளல் என்கிறது. வியாழனால் பிரதிட்டை செய்யப்பெற்றது.

அம்மை திருநாமம் **சுவாந்தர நாயகி.** வியாழன் இத்தலத்துவந்து பூசித்தபோது, தனக்குள் தியானித்த தேவியை வெளிக்கொணர்ந்து பிரதிட்டை செய்தார் என்பது புராண மகாத்மியம்.

சோமாஸ்கந்தர் திருவுருவம் மிக அழகானது. வாகீஸ்வரருக்குத் தென்பால் இவருக்கு விமானத்தோடு கூடிய தனி ஆலயம் அமைந்துள்ளது. இது ஒரு தனிச் சிறப்பு. தக்ஷிணாமூர்த்தி, சுவாமி கருப்பக்கிருக விமானத்தில் தென்பால் மோனமுத்திரைக் கையராகக் காட்சி வழங்குகிறார். அவருக்குப் பக்கத்தில் சிறிது கீழ்பால் சரஸ்வதி இலிங்க வழிபாடு செய்யும் திருக்கோலம் காணப்படுகிறது. அதற்கும் கீழ்பால் விநாயகர் வீற்றிருக்கிறார். கருப்பக்கிருக விமானத்தில் மேல்புறம் அண்ணாமலையார் உள்ளனர். பாதத்தைத் திருமால் தேடும் காட்சியும், முடியை அன்னம் தேடும் காட்சியும் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தில் வடபுறம் பிரமனும் துர்க்காதேவியும் எழுந்தருளியிருக்கின்றார்கள். அதற்குப் பக்கத்தில் சிவபூஜைக்கு இடையூறு செய்த தந்தை தாளை வெட்டி வீழ்த்திய சண்டீசர் ஆலயம் தனியே இருக்கிறது.

உட்பிராகாரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் மனைவி பரவையாருடன் (உற்சவ மூர்த்தி) அருள் வழங்குகின்றார்.

அவருக்கு எதிரில் ஆனந்த தாண்டவ மூர்த்தியாகிய நடராஜப்பெருமான் சிவகாமி சமேதராக, பக்கத்தே மணிவாசகர் நின்று சேவிக்க எழுந்தருளியிருக்கின்றார். உட்பிராகாரம் வடமேற்குமூலையில் நவக்கிரகங்கள், பயிரவர், சூரியன் இவர்கள் பிரதிட்டிக்கப் பெற்றுள்ளார்கள்.

உட்பிராகாரம் தென் திருமாளிகைப் பத்தியில் திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருக்கின்றார். மேலைத் திருமாளிகைப் பத்தியில் ஆதி விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியர், காசிவிசுவநாதர், பாலமுருகன் ஆகியோர்கள் வீற்றிருக்கின்றார்கள். சுவாமி கோயில் ஸ்நபன மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளும், கிராம தேவதைகளும் உற்சவமூர்த்தங்களாக வைக்கப்பட்டுள்ளன. சுவாமி சந்நிதியில் வடபால் முருகப்பெருமான் திருக்கரத்தில் வேலேந்தி, தம்மனைவியார் இருவரும் இருமருங்கும் நிற்க மயில்மீது ஆரோகணித்திருக்கிறார். இவர் உற்சவமூர்த்தி.

உட் பிராகாரத்திற்குச் செல்லும் திருவாயிலின் தென்பால் சித்திவிநாயகரும், வடபால் பால சுப்பிரமணியரும் இருந்துகொண்டு அன்பர்களை ஆட்கொள்கின்றார்கள்.

## 6. தீர்த்தங்கள்

**ஞானதீர்த்தம்:—** இத்தலத்தில் வழிபட்ட வியாழ பகவானால் உண்டாக்கப்பட்டது. மாசி மாத பௌர்ணமை தீர்த்த விசேஷம். மார்கழிமாத குருவாரங்களில் (வியாழக் கிழமைகளில்) இதில் நீராடி வழிபாடு செய்தால் மிகுந்த பலன் உண்டு.

“இந்தத் தீர்த்தத்திற்குப் படித்துறை முதலியன அமைக்கும் திருப்பணியாளர்களும், இந்த ஆலயத் திருப்பணி செய்பவர்களும், இந்தத் தலத்தில் எப்பொழுதும் வசிப்பவர்களும், தீர்த்தத்தில் மூழ்கி வழிபாடு செய்பவர்களும் எல்லா நன்மைகளையும் பெற அருள்பாலிக்க வேண்டும்” என்று வியாழனே பூசனையின்போது பெருமானிடம் கேட்டுக்கொண்டதாகவும், அப்படியே அருள் பெற்றதாகவும் வடமொழிப் புராண மகாத்மியம் கூறுகின்றது.

சந்திரன், தாரை, சரஸ்வதி, தத்தசோழன் ஆகியோர்களும் இதில் நீராடிப் பேறு பெற்றுள்ளார்கள். இப்பொழுது இத் தீர்த்தம் கோயிலுக்கருகில் சுவாமி சந்நிதியில் வடபால் விளங்குகிறது. இதன் கரையில் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப்பெருமானும் எழுந்தருளியிருக்கின்றார்.

## 7. தலப் பெருமை

தன்பெயரைச் சொல்வோர் கேட்போர் பாவங்களையும் போக்கி, விரும்பிய நன்மைகளை அளிக்கும் ஆற்றல் உடையது. நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் ஒருங்கு சேர்ந்து வீற்றிருந்து கடுந்தவம்புரிந்த சிறப்பும் பெற்றது; அன்று அவர்கள் செய்த தவ விசேடத்தால் இன்றைக்கும் இங்கு வாசஞ்செய்யும் மக்கள் அச்சமின்றி - கவலையின்றி இருக்கின்றார்கள் என்றால் இதன் பெருமை சொல்லளவில் அடங்குமோ!

ஞானம் பெற வேண்டுமே; மனம் சாந்திபெறவில்லையே; எங்கு சென்றால் இவை கைகூடும் என்ற

நோக்கத்தோடு தலயாத்திரைசெய்துகொண்டு வந்த வியாழ பகவானுக்கு இங்கு வந்தவுடன் மனம் நிம்மதியாயிற்று. வழிபாடாற்றி ஞானமும் பெற்ருர்.

பிரமதேவன் மனைவி சரஸ்வதி பூசித்து, தக்க யாகத்தில் அறுபட்ட மூக்கினை மீண்டும் பெற்ருள். தேவி பக்தஞகிய தத்தன் என்ற சோழமன்னனும் ஆராதித்துப் பேறு பெற்றுள்ளான். வியாழன் மனைவி தாரை, மாணவன் சந்திரன் ஆகியோர்களாலும் வழிபடப்பெற்றது.

இத்தலத்தின் தென்மேற்கிலுள்ள வழுவூர் ஸ்தல புராணம் வடமொழியிலுள்ளது. அதில் 25, 26 ஆகிய இரண்டு அத்தியாயங்களில் இதன் பெருமை விளக்கப் பெற்றுள்ளது. 26 வது அத்தியாயத்தில் 'புரட்டாசி மாத ஒவ்வொரு செவ்வாயிலும் தேவியை வழிபடுபவர்கள் அளவற்ற செல்வங்களைப் பெறுவார்கள்; பகைவரை ஜயிப்பார்கள். பெருமான் பூசனைக்கு வேண்டிய புஷ்பம் பழம் உள்ளிட்ட பொருள்களைக் கொடுப்பவர்கள் குபேரனுக்கு ஒப்பான செல்வத்தையும் பிரமனுக்கு ஒப்பான கல்வி கேள்வி ஞானங்களையும் அடைவார்கள். தலம் இரண்டு கோசதூரம் சுற்றளவு உடையது. கடைவீதிகள் அழகாக விளங்குகின்றன' என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

உடலை வருத்தித் தவஞ்செய்தால் போதும் முத்தி கிடைக்கும்; இறையருள் வேண்டாம் என்று எண்ணித் தவஞ்செய்த முனிவர்கள், தம்மையும் தம்மனைவிமார்களையும் நிலைதடுமாறச் செய்த பெருமானை அழிக்க எண்ணி யாகஞ் செய்த இடம் இது என்றும் அந்த மகாத்மியம் கூறுகின்றது.

'கற்பில் நாம் மேம்பட்டுள்ளோம்' என்று அகந்தை கொண்டிருந்த அந்த முனி பத்தினிகளின் செறுக்கு அடங்கவே பெருமான் பிக்ஷாடன வடிவங்கொண்டு வந்தார் என்பதை மாயூரத் தலபுராணம்,

'தமருகம் ஒருகை ஆர்ப்பப் பலிக்கலம் ஒருகை தாங்கப்
பமரமுண் மலரில் பாடும் பாட்டின்வாய் கீதம் பாட
அமருவந்(து) இயமற்(கு) ஓலை அனுப்பு மைக்கருங்கண் நல்லார்
தமரொடு வாழும் சேரிச் சார்ந்தனன் பலிகொள்வான் போல்'

என்ற மிக அழகான பாடலால் சித்திரிக்கிறது. அந்தத் திருக்கோலத்தை வழுவூர் ஆலயத்தில் இன்றும் காணலாம். கண்டு தரிசிப்போர் அடையும் பேறு அளப்பில. 'மாதர் கற்புச் சுதமுறப் பயிக்கம் புக்க சுந்தர வடிவினனை, இத முறக் கண்டு போற்றும் இயல்பினர் அடையும் பேற்றை, உதவியினியங்கும் என்னல் ஒருங்குரையாடப் போமோ' என்பது மாயூரபுராணம்.

## 8. புராண வரலாறுகள்

**சரஸ்வதி:—** உமாதேவியை மகளாகப்பெற்ற தக்ஷன் பெருமானுக்கு மகளை மணம் செய்வித்து, தான் மாமனாகவும் ஆயினன். அதனால் அகந்தை கொண்டான். கயிலை சென்ற போது அது காரணமாக வாயில்காப்போரால் தடுக்கவும் பட்டான். தக்ஷனுக்குக் கோபம் அதிகரித்தது. இப் பொழுதே சிவனை நீக்கி ஓர் யாகம் செய்கின்றேன்; எல் லோரும் வாருங்கள் என்று எல்லோரையும் அழைத்தான். பிரமாதி தேவர்கள் பத்தினிமார்களுடன் யாகசாலையிலே

கூடிவிட்டார்கள். யாகம் ஆரம்பமாயிற்று. தந்தை செய்யும் யாகமாயிற்றே என்று வந்த அம்மையாரும் அவமான முற்று மீண்டாள். விதியினை வெல்வார் யார்? இறைவனுடைய நெற்றிக்கண்ணிலிருந்தும் வீரபத்திரக் கடவுள் தோன்றினர். ஆணைபெற்று வீரர்கள் சூழ யாகசாலையை அடைந்து 'தக்கனே!' வேள்விக்குத் தலைவராகிய எங்கள் பெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தைக் கொடு; என் வினைக அழிகின்றாய்' என்று சொல்லியும் தக்கன் உடன்பட்டானில்லை; பெருமானை மேலும் இகழ்ந்தான்; சிவ நிந்தை பெரும்பாதகமல்லவா!

யாகாக்னி போல உக்கிர மூர்த்தியான வீரபத்திரர் யாகத்தையே அழிக்கத் தொடங்கினர். தேவர்கள் ஓட ஆரம்பித்தார்கள். வீரபத்திரர் சும்மாவிடுவரோ! சந்திரனைக் காலால் தேய்த்தார். சூரியனின் பல்லை உடைத்தார். அக்கினியின் கையை முறித்தார். அது போதாதென்று 'எம்பெருமானை நீக்கிச் செய்யும் யாகத்தில் அவி உண்ட நாக்கினைக் காட்டு' எனச் சொல்லி அவனது ஏழு நாக்குகளையும் அறுத்தெறிந்தார். இயமனைப் பிடித்து அவன் தலையை அறுத்தார். இது கண்டு பயந்து குயிலுருவம் கொண்டு பறந்தோடப் பார்த்த இந்திரனைப் பற்றியிழுத்து, சிறகுகளைச் சின்னபின்னப்படுத்தினர். அஞ்சி அகன்ற நிருதியைப் பார்த்து, நில் எனச் சொல்லித் தண்டினால் ஓர் அடி கொடுத்தார். எழு என்ற படைக்கலத்தால் வருண தேவனைத் தடிந்தும், மழுவினால் வாயுதேவனை அடித்தும், முத்தலைச் சூலத்தால் குபேரனை மோதியும் தண்டித்தார். பயந்தோடிவந்து அபயம் அபயம் என வீழ்ந்து பணிந்த உருத்திரர்களையும் ஈசானனையும் தண்டிக்காது, 'போவீர்' என விடுத்தார். இப்படியாக வீரபத்திரக் கடவுள்

தேவர்களைத் தண்டித்து யாகத்தைச் சிதைக்கின்ற போது, பிரமதேவன், மனைவி சரஸ்வதியுடன் அகப்பட்டுக்கொண் டான். பெருமான் அவர்களைச் சும்மாவிடுவரோ! யாராக இருந்தால் என்ன? சிவாபராதத்திற்குத் தீர்வு எது? பிரமனைப் பிடித்து இழுத்து, தலையில் இடிவிழுந்தது போல் ஓங்கிக் குட்டினார். அவ்வளவுதான்; தலை குனிந்து வணங்கு பவனைப் போல் பூமியில் விழுந்தான். அருகே நின்ற சரஸ்வதி மூக்கினை அறுத்து அவளை மானபங்கப்படுத்தினார்.

தேவர்கள் இப்படித் துன்புறுதலைக் கண்ட தக்கன் மனம் பதைத்தான்; 'குருமொழி கேட்டிலேன்; மகள் மொழியை மறுத்தேன்; சிவ நிந்தனை புரிந்தேன்; வீர பத்திரர் சொல்லியும் அவிகொடுக்க இசைந்திலேன்; யான் எப்படியும் இறப்பது உறுதி; விதிவழி மதி சாருமல்லவா' என்றெல்லாம் பலவாறு கூறி வருந்தினான். தன்னை மறந் தான். பெரும் பிழைக்கு மன்னிப்பு எது? பார்த்தார் வீரபத்திரர். 'இதோ பார்; சிவநிந்தகனாகிய உனக்குத் தண்டனை' என்று கூறிக்கொண்டே வாளினால் தக்கன் தலையை அறுத்தார்; கீழே விழாதபடி தாங்கி அக்கினியில் இட்டார். அருகேயிருந்த ஆட்டின் தலையை எடுத்து தக்கன் உடலில் வைத்துப் பொருத்தினார்.

இப்படி வீரபத்திரரால் மூக்கறுபட்ட சரஸ்வதி என் செய்வோம் என்று வருந்தினாள்; கணவனிடம் விண்ணப்பித் தாள். 'தவத்தால் எதையும் அடையலாம்; அதுதான் சிறந்த உபாயம்' என்று கணவன் உபதேசிக்க அதன்படி இத்தலத்திற்கு வந்தாள். பல காலம் யோகிருந்தாள். ஒரு நாள் பெருமான் வெளிப்பட்டு, 'வேண்டியதைப் பெறுக' என்று ஆணை தர, சரஸ்வதியும் 'கருணைக் கடலே!

சிவாபராதியான தக்கன் யாகத்திற்குச் சென்ற காரணத்தால் தகுந்த தண்டனை பெற்றேன். மூக்கையிழந்து மூளியானேன்; யாவரும் பழிக்கும் நிலையில் இருக்கிறேன்; கணவனும் வெறுக்கிறான். ஆதலால் பழியை நீக்கி அருள் பாலிக்க வேண்டும். மேலும் எல்லார் நாவிலும் வீற்றிருந்து வாக்கு விருத்தியளிக்கும் பேற்றையும் தந்தருளவேண்டும்' என்று கேட்டுக்கொண்டாள். பெருமானும் 'அப்படியே ஆகுக' என அருள்சுரந்து மறைந்தனன்.

சரஸ்வதி தன்பெயரால் இலிங்கமமைத்து விதிப்படி பூசித்து வழிபாடாற்றி இழந்த மூக்கை மீண்டும் பெற்றாள். கணவனாகிய பிரமதேவனைச் சார்ந்தாள். வாக்கு வன்மையளிக்கும் பேற்றையும் அடைந்தாள்.

**வியாழன்:—** இவர் முக்காலமும் உணரும் ஒருபெரிய ஞானி; வேதாகமங்களையெல்லாம் நன்கு கற்றவர். இவருடைய மனைவியோ மிகுந்த அழகுள்ளவள். பெயரோ தாரை. அவள் அழகு அவளுக்கே தீமையை உண்டாக்கி விட்டது. குருகுல வாசமாக இருந்துகொண்டு பணிவிடை செய்துவந்த மாணவர்களுள் சந்திரனும் ஒருவன். மனைவி கண்ணும், மாணாக்கன் கண்ணும் ஒன்றுபட்டன. 'கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல' என்பதுதானே வள்ளுவர் கூறும் உண்மை. காட்சி யின்பம் மெய்யின்பமாயிற்று. விதி வழியேதானே மதிசாரும். ஆகவே இருவர்களும் காமக் கடலில் கரை காணாது அழுந்தினர். முக்காலங்களும் உணரும் ஞானியாகிய வியாழன் இச்செயலையும் உணர்ந்தார். குணம் என்னும் குன்றேறி நின்றாரது கோபம்

க்ஷணப்பொழுதும் தடைபடாதல்லவா ? கோபம் அதிகரித்தது. மாணுக்கனுக இருந்தாலென்ன ? வேறு யாராக இருந்தால்தான் என்ன? அடி மடியில் கை வைக்கும் செயலல்லவா இது. 'சந்திர! க்ஷயரோகத்தை அடை' என்று சாபமிட்டார். ஆனல் மனக் கலக்கம் நீங்கினபாடில்லை. பித்துப்பிடித்தவர்போலானுர். யாத்திரை புறப்பட்டார்.

தலயாத்திரை செய்யத் தொடங்கிய வியாழன் கடைசியாக இந்தத் தலத்திற்கு வந்தார். கொஞ்சம் மன நிம்மதி உண்டாயிற்று. இதுவே சிறந்த தலம் என்று உணர்ந்தார். சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். ஹிருதய கமலத்தில் தேவியைத் தியானித்து, வெளிக் கொண்டுவந்து, சுவந்தா நாயகி என்னும் திருப்பெயர் சூட்டி ஸ்தாபித்தார். ஞான தீர்த்தம் என்ற திருப்பெயருடன் ஒரு திருக்குளத்தையும் அமைத்தார். இப்படியாக வழிபாட்டைச் செய்தும் மனம் நிலைத்த உறுதியில் நிற்கவில்லை.

1/3854

பஞ்சாக்ஷர ஜெபத்துடன் நீரில் நின்று தவஞ்செய்தார். பால் அருந்தியும், பஞ்ச கவ்யம் உண்டும், சில நாள் சருகு புசித்தும் தவஞ்செய்தார். ஆண்டுகள் பன்னிரண்டு ஆயின. பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் தொடங்கினுர். தவத்திற்கு இரங்கிய பெருமான் இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு அருள்பாலிக்கவே மனச்சாந்தி ஏற்பட்டது. மெஞ்ஞானம் தோன்றியது.

பிறகு பிரகஸ்பதியாகிய வியாழன் விருப்பப்படியே பெருமான் திருவருளால் க்ஷயரோகம் பெற்ற சந்திரனுகிய மாணுக்கனும், மனைவியாகிய தாரையும் இங்கு வந்து சேர்ந்

தார்கள். தாரை வாகீஸ்வரரை முறைப்படி வழிபாடு செய்து தூய்மை பெற்றாள்.

சந்திரனே பெருமானுக்கு வாயு திக்கில் சிவலிங்கம் தாபித்து, சோமேசர் என்ற திருப்பெயர் சூட்டி, பூஜித்து, வழிபாடு செய்து அனுக்கிரகம் பெற்றான்.

*வியாழன் மாயூரத்திற்கு வந்து வழிபாடுசெய்து பல நாள் தவம்புரிந்தான். பெருமான் தோன்றி 'நின் கருத்து யாது? விரும்புவது என்னை? உரைப்பாயாக' என்றருள் செய்ய, 'பெரும! தேவர்கள் குருவாகும்பேறு வேண்டும்' என்று வரம் வேண்டினன். மாயூரேசர் அவ்வாறே திருவாக்கு நல்கி, 'நமக்குத் தென்பால் கொஞ்ச தூரம் சென்று இலிங்க வழிபாடு செய்க' என்று கட்டளையிட்டார். அதன்படி வியாழன் இங்கு வந்தான். பெருமான் இலிங்க உருவாகக் காட்சியளித்தார். வியாழனும் விருப்பொடு பூசித்து எண்ணிய எண்ணியாங்கு எய்தப்பெற்றான். பெருமானும் வாக்கு வள்ளல் - வாகீஸ்வரர் எனப் பெயர் பெற்றார்.

விருப்பொடு பூசை யாற்றி மேதகு வாக்குப் பெற்றுத்
திருப்பொலி வாக்கு நல்கும் வள்ளலோ என்று செப்பி
மருக்கொள்தன் உலகம் புக்கான் அவற்குஅருள் வள்ளல் என்று
பெருக்களவ் வுலகம் ஓதப் பிறங்கினன் அனைய மூர்த்தி.

என்பது மாயூர ஸ்தலபுராணப் பாடல்.

---

* இவ்வரலாறு மாயூரப் புராணம் நாற்றிசை வள்ளலாகிய படலத்தில் உள்ளது.

16A



ஸ்ரீ சுவாந்தரநாயகி

**தத்தன்:—** இவன் சோழராஜ்யத்தை ஆண்டுவந்த ஒரு பெரிய அரசன். சகலகலா வல்லவன். பரந்த நோக்க முடையவன். அன்பும் இரக்கமும் அவனுக்கு ஆபரணங் கள். காட்சிக்கெளிமை, இன்சொல், ஈகை முதலிய எல்லாக் குணங்களிலும் இவனுக்கு ஒப்பாவார் யாரும் இலர். வீரத்திலும் அப்படியே. இத்தகைய சிறந்த தத்தன் சிவபக்தியிலும் சிறந்து விளங்கினன். சிவபக்தியிலும் தேவி யிடத்தில் மிகுந்த ஈடுபாடு இவனுக்கு உண்டு. பார்க்கும் திசைதொறும் பராசக்தியை அவன் காண்பான். நனவில் மட்டுமல்ல; கனவிலும் தேவி வெளிப்படுவாள்.

தத்தன் இப்படி பரமபக்த சிகாமணியாய் அரசாட்சி செய்து வருகின்ற காலத்திலே சிந்து தேசாதிபதியாக விளங்கினன் யவனன் என்னும் மன்னன். அவனோ மகா கர்வி. பொறாமையினால் பற்றப்பட்டவன். எல்லா அரசர் களையும் தன்கைப்படுத்த வேண்டும் என்ற ஆசை அவனுக்கு. படை பலத்தால் அந்த ஆசையை ஒருவாறு நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை. அதனால் நாடுகள்தோறும் சென்றான். அரசர்கள் பணிந்தனர்; பணியாத அரசர்கள் இறந்தனர். இப்படியாகக் கடைசியில் சோழநாட்டையும் முற்றுகை யிட்டான். மக்கள் ஓடோடி வந்து 'மன்ன! யவனன் மிகுந்த படைபலமுள்ளவன்; மிகுந்த படை களுடன் நம்நாடு நோக்கி வருகின்றான். அவனை எப்படி ஜயிப்பீர்கள்; நாங்கள் என்ன செய்வோம்' என்று தத்த னிடம் முறையிட்டார்கள்.

படை பலத்தைவிட தெய்வ பலத்தையே நம்பி யிருப்பவனல்லவா தத்தன். திக்கற்றவர்கட்குத் தெய்வந் தானே துணை. ஆகவே தெய்வ சகாயத்தை நாடினன்.

"பக்தர்களை ரக்ஷிக்கும் தேவியே! லலிதையே! துர்க்கா பரமேஸ்வரி! சண்ட முண்டர்களை அழித்த நின்பராக்கிரமம் பார் அறியாததோ. பர்வத குமாரி! நின்னை யன்றி வேறு அடைக்கலமாவார் யார்? நின்னை வணங்குகிறேன்" என்று சொல்லிக்கொண்டே தேவி ஸ்மரணையுடன் கண் அயர்ந்தான். கருணையம்பிகை கனவில் வெளிப்பட்டாள்; 'அன்பனே! தேவியைத் தியானிப்போர்க்குத் தீங்கு எது? கவலை வேண்டாம். பெருஞ்சேரியில் வீற்றிருக்கும் சுவாந்தரநாயகியை வழிபடு; அம்மை அருள் உனக்குக் கிடைக்கும்; இன்றே செல்க' என்று ஆசியும் அருளினள். மன்னன் விழித்தான். எளியேனுகிய எனக்கும் தேவி அருள் கிடைத்ததே என்று வியந்தவனாய் இத்தலத்திற்கு வந்தான். ஆராதனைப்பொருள் கொண்டு சுவாந்தர நாயகியை அன்போடு ஆராதித்தான். திருமுன் நின்று தியானவாயிலாக உள்ளத் தாமரையில் தேவியை எழுந்தருளச் செய்தான். இப்படியாக இருபத்தொரு தினங்கள் வழிபட்டு வந்தான். மறு நாள் வழிபாட்டின் முடிவில் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத சுயம்பிரகாச சுவ ரூபியாக தேவி வெளிப்பட்டாள். அது மட்டுமா? தத்தனேடு பேசுகின்றுள்.

'தத்த! கவலை வேண்டாம். இருப்பிடம் செல். இன்னும் ஆறுநாளில் யவனனை அழிக்கிறேம்' என்று அருளி மறைந்தாள் தேவி. தத்தனும் தேவி அனுக்கிரகத்தோடு ஊர் சென்றுன். நாட்கள் ஐந்தும் சென்றுவிட்டன. குறித்தபடி ஆறும்நாள் காவலர்கள் அரண்மனை நோக்கி ஓடி வருகின்றுர்கள். தத்தனும் தேவியின் வாக்கைச் சிந்தித்துக்கொண்டே 'இன்றுதானே பகைவன் ஒழியும் நாள்' என்ற கருத்துடன் இருக்கின்றுன். ஓடி வந்தவர்கள்

மன்னனிடம் மகிழ்ச்சிச் செய்தியைத் தெரிவிக்கிறார்கள்; "மன்ன! யவனன் இறந்தொழிந்து விட்டான்; மகாமாரி சேனைகளோடு சென்று அழித்தாள்" என்று.

மன்னன் கேட்டவுடனே அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேது. தேவியின் திருவருளை வியந்தான். தன் வசமற்றான். தேவியின் திருவருளால் இழுக்கப்பட்டு ஓடோடி வந்தான். சுவாந்தரநாயகிக்கு முன்னையவிடபன் மடங்கு அதிகமாக அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டான். தென் பக்கத்தில் தன்பெயரால் இலிங்கம் அமைத்து விதிப்படி வழிபாடாற்றினான். சிலகாலம் செங்கோலோச்சிப்பேரின்பம் பெற்றான்.

**பிக்ஷாடனர்:—** தாருவனமாகிய இத்தலத்தில் வாழ்ந்த முனிவர்கள் 'சிவபக்தி வேண்டாம்; வேள்வியும் தவமும் தாமே கொடுத்திடும் முத்தி' எனும் கொள்கை யுடையவர்கள். முனி பத்தினிகளும் கற்பில் நம்மை ஒப்பார் யாரும் இலர் என்னும் தருக்குக் கொண்டவர்கள். ஆகவே இவர்களின் தருக்கொழித்து ஆட்கொள்ள வேண்டும் என்று திருவுள்ளங்கொண்ட பெருமான் திருமாலை எண்ணினார். மாலும் வந்தனர். உடனே அவருக்கு மோகினி உருவமளித்து 'நீ தாருவனம் சென்று முனிவர்கட்கு மையலை உண்டாக்கி விரதத்தை அழித்து வருக' என்று ஆணை தந்து அனுப்பினார். கண்ட முனிவர்கள் காமுற்று, தீயில்பட்ட தளிர்போல் விரகத்தீயால் வாடினர். தம் விரதத்தை மறந்தனர்.

திருமாலை அனுப்பிய பெருமானும், கண்டாரை வசீகரிக்கும் கட்டழகுடைய - பெண்டிரே யன்றி ஆடவரும் பெண்மை அவாவும் பேரழகுடைய திருக்கோலங் கொண்டருளினார்.

குறுக்கை என்னும் திருத்தலத்தில் பெருமான் யோகிருந்தபோது அதனைக் கலைக்க மன்மதன் சென்று அவரது நெற்றிக்கண் தீயால் அழிந்தானே. அப்படி அழிந்த பிறகு அவனது வேலையைச் செய்ய, பலகோடி சூரியர்கள் ஒன்று சேர்ந்தாலொத்த மிகுந்த ஒளியோடு கூடிய வடிவத்தைப் பெற்றார் பெருமான் என்று சொல்லு மாறு இருந்ததாம் அவர் திருவேடப் பொலிவு.

* 'மன்னிய குறுக்கை யின்கண் மதனனை எரித்த பின்னர்
உன்னிய அணையான் செய்கை ஒருதானே செயக்
கொண்டாங்குத்
துன்னிய அனந்த கோடி சூரியர் திரண்டால் ஒத்து
மின்னிய வனப்பு வாய்ந்து விளங்கும் ஓர்உருவம் கொண்டான்'

என்பது மாயூர ஸ்தல புராணப்பாடல். இப்படித் திருக் கோலங்கொண்ட பெருமான், திருக்கரங்களில் பிக்ஷா பாத்திரம், சூலம், உடுக்கை ஆகியவைகளையும் ஏந்திக் கொண்டார்; வேதமாகிய பாதுகை பூண்டார்; ஐயம் ஏற்பார் போல இத்தாருவனத்திற்கு வந்தார். இவருடைய பாட்டொலி பர்ணசாலையிலிருந்த முனிபத்தினிகளை இழுத் தது. வெளிவந்து திருக்கோலத்தைக் கண்டார்கள். மன்மத பாணத்தால் தாக்குண்டு, உணர்வு மாழ்க, உயிர் பதைக்க, காமக்கடலில் அழுந்திக் கலங்கினர்; பிதற்றவும் செய்தார்கள். இவர் பலி வேண்டுவது ஓர் சூழ்ச்சியே என்பார்; நம் ஊருக்கு வந்தது நாம் செய்த முன்னைத்தவம் என்பார்; வணங்குவது போல அருகிற்சென்று உடம்பைத் தொடுவோம் என்பார். இப்படிப் பிச்சையிடவந்த சிலருக்கு வளையல்களும் ஆடைகளும் நழுவின. அவர்களை நாணம்

---

* யானை புரித்த படலம். பா. 12.

விட்டது. கற்புக் குலைந்து ஓடியது. பின்தொடர்ந்து சென்ற மகளிர்க்கெல்லாம் இந்திர ஜாலத்தைப் போல பல உருவங்களைக் காட்டி, மயக்கத்தை அதிகப்படுத்தினர். காட்சி இன்பத்திலேயே கருக்கொண்டனர் சில மகளிர்; ஆனாலும் கருவுயிர்க்கும் வருத்தமில்லாமலே அளவில்லாத ஆண்மக்களையும் பெற்றார்கள். இப்படியாகத் திருமால் கொண்ட மோகினி வடிவங் கண்ட முனிவர்களும், பெருமான்கொண்ட பிட்சாடன வடிவங்கண்ட முனி பத்தினிகளும் நிலை தடுமாறினர். இப்படியாக முடிவில் இரு திருவடிவங்களும் மறைந்தன.

முனிவர்கள் கோபங்கொண்டனர். 'இத்தகைய பழியை நமக்கு உண்டாக்கிய கண்ணுதலோனைக் கொல்ல வேண்டும்' என்று முடிவுக்கு வந்தனர். வேள்வியால் எல்லாவற்றையும் செய்துவிடலாம் என்பதுதானே முனிவர்கள் கருத்து. ஆகவே யாககுண்டமமைத்து, தீ வளர்த்து, மந்திரம் ஓதினர். அக் குண்டத்திலிருந்து எழுந்த எல்லாவற்றையும் 'சென்று ஈசனை அழித்து வருக' என்று ஒவ்வொன்றாக விடுத்தனர். முதலில் புலி வந்தது. அதனை உரித்து, தோலை ஆடையாக அணிந்துகொண்டார். அடுத்தது சூலம்; 'நீ நமக்குப் படைக்கலமாக இருக்க' எனக் கூறிக் கரத்தில் ஏந்தினர். மான் வந்தது; நம் காதுக்கருகில் எப்பொழுதும் இருந்து கத்துக என்று சொல்லி இடக்கரத்தில் பிடித்துக்கொண்டனர். அடுத்து வந்த பாம்பினை ஆபரணமாக அணிந்தார். வந்த பூதக்கூட்டங்களை 'சேனைகள் ஆகுக' எனப் பணித்தார். வெண்டலையைச் சடையில் இருக்கச்செய்தனர். மந்திரங்களை ஏவவே அவைகள் உடுக்கை வடிவங்கொண்டு எதிர்த்துப் பேரொலி செய்தன. அதனையும் பெருமான் திருக்கரத்தில் ஏந்தினர். கடைசியாக

முயலகனையும், வேள்வித் தீயையும் அனுப்பவே, முயலக னைக் கீழே தள்ளி முதுகில் திருவடியை ஊன்றி நின்றார். தீயையும் மற்றொரு கரத்தில் தாங்கினர்.

இப்படி ஒவ்வொரு பொருளும் இறைவனால் ஆட் கொள்ளப் பெற்றுத் தத்தம் வலியடங்கின. கண்ட முனிவர் கள் சபித்தும் பார்த்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. முடிவில் முனிவர்கள் அனைவரும் ஒருங்கே பெருமானிடம் வந்து, செயலற்றவர்களாகிக் கீழே விழுந்து பணிந்தார் கள்; பிழை பொறுக்க வேண்டினர். குற்றம் செய்யினும் குணமாக்கொண்டு கருணை பாலிக்கும் பெருமான் 'பிழை பொறுத்தோம்; இனி அவநெறி சாராது, தவநெறி ஒழுகி, மறம் அகற்றி அறம்பல செய்து மாதவம் புரிதிர்' என்று அருள் வழங்கினார்.

**குறிப்பு:—** இவ்வரலாற்றின் விரிவைக் கந்த புராணம் ததீசி உத்தரப் படலத்தில் காண்க. பின்னர் வந்த மாயூர ஸ்தல புராணம் யாகத்தில் தோன்றிய யானையை முனிவர்கள் ஏவினர்; அதனைப் பெருமான் உரித்துப் போர்த்தனர் எனக் கூறுகின்றது. கந்த புராணமோ யானை வடிவுகொண்ட கயாசுரன் என்பான் தவ வலிமையால் உலகிற்குத் துன்பம் செய்ய, முனிவர்கள் வேண்டு கோட்படியே பெருமான் அவனது தலையை ஒரு திருவடியினாலும் தொடையை மற்றொரு திருவடியினாலும் மிதித்துக்கொண்டு, கர நகங்களால் முதுகில் கிழித்து, நான்கு கால்களும் நான்கு பக்கத் திலும் பொருந்தும்படி தோலை உரித்தார் என்கிறது.

## 9 சிற்பங்கள்

உட்பிராகாரம் கீழைத் திருமாளிகைப் பத்தியிலுள்ள கஜலக்ஷ்மியும், முன் கோபுரத் திருவாயிலினுள் நுழைந்ததும்

வடபால் விளங்கும் இடும்பன் திருவுருவமும் சுதையா லானவை. வர்ணப் பூச்சுக்கள் இன்றும் அழியாமல் புதுமையாகவே காட்சியளிக்கின்றன. உட் கோபுர வாயி லில் வடபக்கத்திலுள்ள நர்த்தன விநாயகர் திருவுருவ அமைப்பு சிற்பியின் கைத்திறனைக் காட்டுகிறது.

## 10. திருப்பணிகள்

கோயிலில் பெரும்பாலான பகுதி வௌவால் நத்தி மண்டபமாகவே யுள்ளன. வட திருமாளிகைப் பத்தி மண்டபம், மடைப்பள்ளி, அம்மன் சந்நிதி முன்மண்டபம், சுவாமி கோயில் முன்மண்டபம் ஆகியவைகள் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன் மாயூரத்தின் வடபாலுள்ள பல்லவராயப்பட்டில் வசித்த அழகப்பிள்ளை அவர்களால் கருங்கல் திருப்பணியாகக் கட்டப்பெற்றிருக்கின்றன.

## 11 பூஜையும் விழாக்களும்

நாடோறும் ஐந்து கால பூஜைகள் நடைபெறுகின் றன. மார்கழிமாதக் குருவாரங்களில் விடியலில் பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளியாகித் தீர்த்தங் கொடுத்தருளுவர். வியாழக்கிழமை காலை எமகண்டமாதலின் எமகண்ட தீர்த்தம் என இவ்விழா வழங்கப்பெறுகிறது. புரட்டாசி மாதச் செவ்வாய்க்கிழமைகள் தைமாத வெள்ளிக்கிழமைகள் அம்மைக்கு விசேஷம். தைமாத இறுதிச் செவ்வாய்மட்டும் அம்மன் புறப்பாடு நிகழும். நவராத்திரி விழா, விஜயதசமி, மாட்டுப் பொங்கலன்று பாரிவேட்டை, மார்கழித்

திருவாதிரை உள்ளிட்ட ஏனைய திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. மாசி மகத் திருவிழாவைக் குரு பகவான் சிறப்புற நடத்திவந்தார். ஏதோ காரணங்களால் நின்றிருந்தது. இந்த ஆண்டு முதல் திருவருளால் இவ்விழா தொடங்கப்பெற்றுள்ளது.

## 12. சுற்றுத் தலக் கோயில்கள்

வீரசோழனாற்றிற்குத் தென்பால் தத்தங்குடியில் தத்தசோளேசர் கோயிலும். மங்கநல்லூர் மங்களேசுவரர் கோயிலும், ஆற்றிற்கு வடபால் மேட்டுப்பாக்கம் திரிவிக்கிரம சோளேஸ்வரர் கோயிலும், நெப்புக்கோயில் சோமநாதர் கோயிலும், கற்பாதைக்குக் கீழ்பால் தஸ்ரே சுவரர்கோயிலும் அமைந்து அழகுசெய்கின்றன. இத்தலத்தின் தென்மேற்கே சற்று தூரத்திலுள்ள வழுவூர் என்ற வீரட்டான ஸ்தலமும் தரிசித்தற்குரியது.

## 13. நிர்வாகம்

நாகப்பட்டினம் இந்து தர்ம பரிபாலன அறநிலையப் பாதுகாப்புக் கழக உதவி ஆணையாளரின் ஆளுகைக்கு உட்பட்டது. ஷை கழகத்தாரால் நியமனஞ் செய்யப் பெற்ற மானேஜர், கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார். ஷை கழகத்தாரால் நியமிக்கப்பெற்ற தர்ம கர்த்தாவும் (Trustee) கூட இருந்து ஆவன செய்து வருகிறார்.

## 14. வருமானமும் சொத்துக்களும்.

நஞ்செய் 160 ஏ., 54 செ. இனும் நஞ்செய் 6 ஏ., 10 செ. புஞ்செய் 7 ஏ., 84 செ. இனும் புஞ்செய் 39 ஏ., 91 செ. ஜாரிமனைகள் 2 ஏ., 60 செ.

வாகனங்கள் படிச்சட்டங்கள் மதிப்புத் தொகை ரூ. 2000. திருவாபரணங்கள் சுமார் மதிப்பு ரூ. 1500. வருஷ வருமானம் சுமார் ரூ. 20000.

## 15. கல்வெட்டுக்கள்

சுவாமி கருப்பக்கிருக விமானத்தின் தென்பால் வெளிப்புறத்திலும், ஸ்நபன மண்டபம் தென்கிழக்கு மூலை யிலும் சில கற்களில் கல்வெட்டுக்கள் சிதைந்து காணப் படுகின்றன. தெரிந்தவரையில் கல்வெட்டுப் பிரதிசெய்யப் பெற்றுள்ளது. அது பின்வருமாறு:—

சுவஸ்தி ஸ்ரீ புயலவாயதது வளம் பெருக......பரகேசரிவன் ......கள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தெவறகு யாண்டு **கச** வது உய்யகொண்ட ... வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு பெருஞ்சேரி யுடைய மாதேவர் ...... வாகீஸ்வரமுடையார் கோயில் திருக் கற்றளியுடைய தேவேந்திர ...... ராஜதேவிக்கு ஐஞ்சாவது...... தாருவெ... கண்டியூருடையான அமரகனெந்தத் திருச்சிற்றம்பல முடையான் செயதரவெள்மகன அமரர்களநாதந் ஐந்நூற்றுவன் திருமண்டப பெலிபிடப ஜெயதரனை ........தாருகா புரத்து ......குலொத்துங்க ...... தெரு ... பாகா ...... இழித்து குஞ் ......மத்துக்கு ......குலோத்துங்க சோழ பொராற்றுக்கு ......மா ......நது வலிக...

இந்தக் கல்வெட்டு 'சுவஸ்தி ஸ்ரீ புயல்வாய்த்து' என்று தொடங்குவதால் இதில் குறிக்கப்பெற்ற குலோத்துங்கன்

கி. பி. 1178 முதல் 1218 வரை ஆட்சிபுரிந்த மூன்ருங் குலோத்துங்க சோழ தேவனுக இருக்கலாம் என்று கருதப் படுகிறது. இப்படித் தொடங்கும் மெய்க்கீர்த்தி இவனது ஆட்சி மூன்ரும் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து ஏற்பட்ட தாகச் சரித்திர ஆசிரியர் கூறுகின்றனர். ஆனல் இம்மன்ன னது சில கல்வெட்டுக்கள் மட்டும் 'புயல் வாய்த்து மண் வளர' 'புயல் பெருக வளம் பெருக' என மாறுபாட்டுடன் தெரிகின்றன. இவன் பாண்டியர்களோடும், ஈழநாட்டு - கொங்குநாட்டு - வடநாட்டு மன்னர்களோடும் பல போர் கள் நிகழ்த்தியுள்ளான். சிற்பத்திறத்தினைச் செம்மையாக எடுத்துக்காட்டும் திருபுவனப் பெருங்கோயில் இவனல் கட்டப்பெற்றதே.

---

# தோத்திரங்கள்

## விநாயகர் தோத்திரம்

வானுலகு மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

## சுப்பிரமணியர் தோத்திரம்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய்போற்றி
முன்னிய கருணை ஆறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்இரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி.

## சுவாமி தோத்திரம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

## அம்மை தோத்திரம்

சுரம்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்(து)என்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பும்இள நகைபோற்றி ஆரணநூ
புரம்சிலம்பும் அடிகள் போற்றி.

## வீரபத்திரர் தோத்திரம்

கரமிழப்பத் தழற்கடவுள் கண்ணிழப்ப
விண்ணிரவி கருதாத் தக்கன்
சிரமிழப்பப் பனித்திகிரி கலையிழப்பத்
தேவர்பிரான் திண்தோள் கொண்ட
உரமிழப்பத் திருமாலும் திசைமுகனும்
முனிவரரும் உடைந்து தக்கன்
வரமிழப்ப உருத்தெழுந்த வயவீர
பத்திரன்தாள் வணக்கம் செய்வாம்.

## நடராஜர் தோத்திரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

## தக்ஷிணாமூர்த்தி தோத்திரம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்(கு) அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.

## சரஸ்வதி தோத்திரம்

வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்க என் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ சகம் ஏழும் அளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலா வல்லியே.

## இலக்குமி தோத்திரம்

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே! வேலை
அங்கணுலக(கு) இருள்துரக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க்(கு) ஊட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே!
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவணன்றோ மல்லல்வளம்
சிறந்தோங்கி இருப்ப தம்மா!

## சண்டேசுரர் தோத்திரம்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதற்கு அமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன்ஆடைகள் பிறவும்
வேறு தனக்கென் றமையாமே
மன்னும் தலைவன் பூசனையின்
மல்கும் பயனை அடியார்கொள்
துன்னும் படிபூசனை கொள்ளும்
தூயோன் அடித்தாமரை தொழுவாம்.

TAMIL NADU ARCHIVES ... MADRAS-600 ...
113854

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 4 | மேற்கு | கிழக்கு |
| ,, | 15 | மயில்மீது ஆரோகணித்திருக்கிறார். | காட்சிதந்தருளுகின்றார். |
| 10 | 9 | தென் | வட |
| 17 | 14 | பொறுமை | பொருமை |
| 22 | 25 | கீழை | மேற்கு |
| 24 | 13 | தென் | வட |